In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.11/2021 — Prosecution witness P.W.5
Name: Tamalarasi — Calling:
Father Name: — Religion:
Village: — Caste:
Taluk: — Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28.08.2023

**(Accused is present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது முத்துலாபுரத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அசா1 முதல் 4 சாட்சிகளை தெரியும். அவர்கள் என் ஊரைச் சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரியை தெரியும். 17.05.2020ம் தேதி மதியம் சுமார் 2.45 மணியளவில் நான் பூங்கொடி, விஜயலட்சுமி ஆகியோர்கள் கூலி வேலைக்கு போய்விட்டு வீட்டுக்கு செல்வதற்காக காலனி வீட்டுப்பக்கம் போய்க் கொண்டு இருந்தோம். அப்போது எதிரி சங்கிலி வீட்டிற்கு முன்னால் கற்பகம், அழகர்சாமி, கிருஷ்ணமூர்த்தி நின்று கொண்டு சத்தம் போட்டுக்கொண்டு இருந்தபோது சங்கிலி அழகர்சாமியின் தாயாரை அசிங்கம் அசிங்கமாக பேசிக்கொண்டு இருந்தார். திடீரென சங்கிலி வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்துவந்து கிருஷ்ணமூர்த்தியின் இடது மார்பில் இரண்டு குத்து குத்தினார். குத்தியவுடன் கிருஷ்ணமூர்த்தி கீழே விழுந்துவிட்டார். நாங்கள் எல்லோரும் கத்தினோம். நாங்கள் அய்யோ கத்தியில் குத்திவிட்டு ஓடுகிறானே என்று கத்தினோம். வினோத்தும், அலெக்சும் கிருஷ்ணமூர்த்தியை பைக்கில் வைத்து வத்தலக்குண்டு அரசு மருத்துவமனை கொண்டு சென்றார்கள். நாங்கள் பின்னாடியே சென்றோம். ஆனால் கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னார். மறுநாள்

போலீசார் மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை செய்தார்கள். என்னையும் விசாரித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.08.28 17:54:59 +0530

Principal District Judge,
Dindigul.